Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை - 08 | 21-04-2003 | திங்கட் கிழமை | ஓசை 62

மண விழாக்களை மகிழ்வுடன் கொண்டாட மனதிற்கினிய ஆடைத்தெரிவுக்கு

சாந்தா ரெக்ஸ்

பஜார் வீதி, வவுனியா

T.P:24-22879

# வைத்திய கலாநிதி கெங்காதரனுக்கு தேசியத் தலைவர் பரிசு வழங்கிக் கௌரவிப்பு



வைத்திய கலாநிதி கெங்காதரன் அவர்களின் 50 வருட கால சேவையைப் பாராட்டி தேசியத் தலைவர் அவர்கள் நேற்று நினைவுப் பரிசு வழங்கிக் கௌரவித்துள்ளார். இது தொடர்பாக நேற்று வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

வைத்திய கலாநிதி கெங்காதரன் அவர்கள் மருத்துவ சேவையில் இன்று ஐம்பது 50 வருடத்தைப் பூர்த்தி செய்கின்றார். இவர் தனது சேவைக் காலத்தில் மனித விழுமியங்களின் உச்சதைத் தொடும் வகையில் எமது மக்களுக்கு வைத்திய சேவை ஆற்றியுள்ளார் என்பது மறக்கமுடியாத உண்மையாகும். மனித வரலாற்றில் வைத்தியசேவையென்பது மிகவும் மகோன்னதமாகும். இம்மகோன்னத சேவையில் கடமையாற்றியவர்களில் பலர் சேவையின் உச்சதைத் தொட்டு நடம்பதித்துள்ளனர். அவ்வாறானவர்களிற்கு சற்றும் சளைக்காது வைத்திய கலாநிதி கெங்காதரன் அவர்களும் அச்சேவையை ஆற்றியுள்ளார்.

எமது மக்கள் இடம் பெயர்ந்து இன்னலுற்று மருந்துத் தடைகள், வைத்தியர்கள் பற்றாக்குறை காரணமாக அல்லற்பட்டபோது இரவு பகல், நேரகாலம் பாராது சேவையாற்றி வந்ததுடன் சேவையாற்றியும் வருகின்றார். நெருக்கடியான காலகட்டத்தில் வன்னியில் பலவீனமுற்றிருந்த வைத்திய சேவை இவரால் பலம் பெற்று மக்களின் நல வாழ்விற்கு உறுதுணையானது.

இவரது சேவை என்றென்றும் பாராட்டுக்குரியது. தமிழ் மக்களின் வரலாறு இவரின் சேவையை நன்றியோடு எப்போதும் நினைவு கூரும். இவரது தன்னலமற்ற சேவையைப் பாராட்டி தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் நினைவுப் பரிசு வழங்கிக் கௌரவித்துள்ளார்.

# சிறிலங்கா அரசு கடற்புலிகளை கடற்படையாக அங்கீகரிக்க வேண்டும்!

## போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரேலெவ்சன்

(கொழும்பு)

**சிறிலங்கா அரசு தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்புலிகளை ஒரு கடற்படைப் பிரிவாக அங்கீகரிக்க வேண்டும் என போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலெவ்சன் கடலில் போர்நிறுத்தம் தொடர்பாக அரசிடமும்-புலிகளிடமும் முன்வைத்துள்ள சிபார்சில் தெரிவித்துள்ளார் என ஆங்கில வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.**

போர் நிறுத்த உடன்படிக்கை நடைமுறைகளையும் சர்வதேச சட்டங்களையும் ஏற்று நடத்தல். அதாவது, இருதரப்பு கடற்படையினரும் எந்த மட்டங்களைச் சேர்ந்தவர்களானாலும் சரி போர்நிறுத்த உடன்படிக்கை நடைமுறைகளையும் சர்வதேச சட்டங்களையும் எந்தவொரு நிலைகளின் போதும் அனைவரும் தவறாது ஏற்று நடக்க வேண்டும். என வலியுறுத்தப்பட்டுள்ளது. கடலில் போர்நிறுத்த உடன்படிக்கை நடைமுறைகளை அமுல் படுத்துவது தொடர்பான கொள்கை பற்றியும் அந்த சிபாரிசில் முன்வைக்கப்பட்டுள்ளது. கடலில் போர்நிறுத்த உடன்படிக்கை நடைமுறைகளை

(08ஆம் பக்கம் பார்க்க)

# கடற்றொழிலாளி மீது துப்பாக்கிச் சூடு

(திருகோணமலை)

இறால்குழிப் பகுதியில் இனந் தெரியாத நபர்கள் கடற்றொழிலாளர் ஒருவரை துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்தியுள்ளனர்.

இவர் சிகிச்சைக்காக திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# மூதூர் பொலிஸ் பிரிவில் தொடர்ந்தும் ஊரடங்கு அமுல்

(கொழும்பு)

மூதூர் பொலிஸ் பிரிவில் நேற்று மாலை மீண்டும் ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

வன்முறையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவென நேற்றுக் காலை தற்காலிகமாக நீக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்று மாலை 4.00 மணிமுதல் மீண்டும் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, திருகோணமலை

(08ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை ஜமாலியாப் பகுதியில்

# கைக்குண்டு வீச்சினால் குழந்தைகள் உட்பட06 பேர் காயம்!

திருகோணமலை ஜமாலியாப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற கைக்குண்டு வீச்சு சம்பவத்தில் ஆறு பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தோரில் குழந்தை ஒன்றும் பெண்ணொருவரும் அடங்குவதாக திருகோணமலை பொலிசார் தெரிவித்துள்ளனர்.

ஜமாலியாப் பகுதியில் உள்ள பேக்கரி ஒன்றிலேயே இந்தச சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான

(08ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்குழுவின் சிபார்சு குறித்து கடற்படைத்தளபதி கடும் விமர்சனம்!

சிறிலங்கா போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலெவ்சன் கடலில் போர்நிறுத்தம் பற்றி முன்வைத்திருக்கும் சிபாரிசினை சிறிலங்கா கடற்படைத் தளபதி கடுமையாக விமர்சித்துள்ளார். விடுதலைப்புலிகளின் கடற்புலிகளை சிறிலங்கா அரசு ஒரு கடற்படைப்பிரிவாக அங்கீகரிக்க வேண்டும் என்பது குறித்தும் விடுதலைப் புலிகளின் கடற்புலிகளுக்கான கடல் எல்லைகள் வரையறை செய்வது குறித்துமே சிறிலங்கா கடற்படைத்தளபதி கடும் விமர்சனத்தை முன்வைத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மூதூர் சம்பவம் தொடர்பாக இன்று

# பள்ளிவாசல் பிரதிநிதிகள் அரசியல் துறையினர் சந்திப்பு

முஸ்லிம் பள்ளிவாசல் பிரதிநிதிகளுக்கும் திருகோணமலை அரசியல் துறையினருக்கும் இடையே இன்று சந்திப்பு ஒன்று நடைபெறவுள்ளது.

மூதூர் சம்பவம் தொடர்பாக திருகோணமலையில் அமைந்துள்ள இலங்கைப்போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுச் செயலகத்தில் இன்று பிற்பகல் 5.30 மணிக்கு இச் சந்திப்பு இடம் பெறவுள்ளது.

# புலிகள் போரை ஆரம்பித்தால் சிறிலங்காவிற்கு இந், அமெ. உதவும்!

## அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவிப்பு

தன்னிச்சையாக விடுதலைப்புலிகள் மீண்டும் போரை ஆரம்பித்தால் சர்வதேச நாடுகள் சிறிலங்கா அரசுக்கு உதவி வழங்கும் என அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக பௌத்த குருமாருக்கு விளக்கமளிக்கும் கருத்தரங்கிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மீண்டும் போர் ஆரம்பிக்கப் பட்டால் சிறிலங்காவுக்கு உதவுவோம் என்று இந்தியா, அமெரிக்கா உட்பட பல நாடுகள் உறுதி வழங்கியுள்ளன. இது பேச்சளவிலான உத்தரவாதம் மட்டுமல்ல.

அண்மையில் கடற்பரப்பில் ஏற்பட்ட பிரச்சினை ஒன்றின்போது இந்தியா உதவி வழங்கியிருந்தது. அமெரிக்கா கப்பலொன்றை வழங்கியிருந்தது.

விடுதலைப்புலிகள் பல்வேறு நாடுகளுக்குச் சென்று அரசியலமைப்புக்கள் மற்றும் அதிகாரப்பரவலாக்கல்கள் தொடர்பாக ஆழமாக

(08ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் சிலாபத்துறையில்

# முஸ்லிம் ஊர்காவற்படையால் தமிழர் ஒருவர் சுட்டுக்கொலை

(மன்னார்)

மன்னார் சிலாபத்துறையில் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் தமிழர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். நேற்று அருவியாறு என்ற இடத்திற்கு உழவு இயந்திரத்தில் மண் ஏற்றச் சென்ற பீற்றர் (வயது -28) என்பவரே இவ்வாறு முஸ்லிம் ஊர்காவற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டவர் ஆவார்.

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

முத்துகுமார் விஸ்வலிங்கம் என்பவருடைய குடும்ப அட்டை மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய புத்தகப்பை கிளிநொச்சி டிப்போ சந்திக்கு அருகாமையில் தவறிவிட்டது இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். (3098)

### தவறிவிட்டது

19.04.2003 (சனிக்கிழமை) காலை 10.30 மணியளவில் வட்டக்கச்சி பண்ணைக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் றிச்சட் றொபேட் என்பவருடைய முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் ஒன்று தவறிவிட்டது. இதனை கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை கிளிநொச்சியிலோ, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடுவப்பணியகத்திலோ ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3097)

---

## கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் வட்டக்கச்சி

## வாகன விற்பனை –பகிரங்க ஏலம்

01. எம்.டி.90 உந்துருளி த-13-1203
02. முச்சக்கர வண்டி (ஆட்டோ) த-1-1619

கரைச்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கத்திற்குச் சொந்தமான மேற்படி உந்துருளி, முச்சக்கரவண்டி ஆகியன ஏலத்தில் விற்பனை செய்யப் படவுள்ளன. இவ்வாகனங்களை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் வேலை நாட்களில் பார்வையிடலாம். கூடிய ஏல விலையில் வாகனத்தை பெற்றுக் கொள்பவர் உடனடியாகப் பெறுமதியினைச் செலுத்துதல் வேண்டும்.

ஏலத்தில் விடப்படும் திகதி :- 26.04.2003 (சனிக்கிழமை) காலை11.00 மணிக்கு ஆரம்பம்.

**தலைவர்/பொது முகாமையாளர்,**
**கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,**
**வட்டக்கச்சி.**

(சி.8081)

---

## கிளி - மாவட்ட தொழில் நுட்பக் கல்லூரி

## விண்ணப்பம் கோரல்

01. வீட்டு மின் இணைப்புக்கான தொழிற் சான்றிதழ் கற்கை
02. வானொலி (றேடியோ), தொலைக்காட்சி (ரீ.வி) திருத்துதல் பயிற்சி நெறி.
03. டீசல் இயந்திரங்கள் திருத்துதல் பயிற்சி நெறி

ஆகிய கற்கை நெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித் தகைமை :- க.பொ.த.(சா/த)
வயது :- 18 - 40 வரை

தகைமையுடையவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை 30.04.2003 க்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

**குறிப்பு** :- இப்பயிற்சி நெறிகள் யாவும் கிளிநொச்சி நகரிலேயே நடைபெறும்.

**அதிபர்,**
**தொழில் நுட்பக்கல்லூரி,**
**கிளிநொச்சி.**

வன்னேரிக்குளம் வீதி,
ஆனைவிழுந்தான்.

(சி-8089)

---

## கிளி-மாவட்ட தொழில்நுட்பக் கல்லூரி

## பகுதி நேர விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பம் கோரல் (தற்காலிகம்)

பின்வரும் பாடங்களை கற்பிப்பதற்கு தகைமையுடைய சம்பந்தப்பட்ட துறைசார்ந்த பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கணக்காய்வு
2. புள்ளிவிபரவியல்
3. வியாபாரத் தொடர்பாடல்
4. கணக்கியல்
5. முகாமைத்துவம்
6. கணினி

தொழில்நுட்ப துறைசார்ந்த போதனாசிரியர்கள்:-

1. வீட்டு மின்னிணைப்பு
2. ரீ.வி திருத்துதல்
3. ரேடியோ திருத்துதல்
4. டீசல் இயந்திரம்
5. மேசன் பயிற்சி நெறி

மேற்படி பாடநெறி, பயிற்சி நெறிக்குரிய தகுதியுடையோர், உரிய துறை சார்ந்த ஆவணங்களுடன், எதிர்வரும் 28.04.2003 ஆம் திகதி, திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு, கிளி/வலயக்கல்வி பணிமனைக்கு அருகிலுள்ள கிளி/தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெறும் நேர்முகத் தேர்வில் சமுகந்தரவும்.

**அதிபர்,**
**தொழில்நுட்பக்கல்லூரி,**
**ஆனைவிழுந்தான்.**

வன்னேரிக்குளம் வீதி,
கிளிநொச்சி.

(சி-8088)

---

## எம்.எஸ்.எவ் நிறுவனத்தினரின் முக்கிய அறிவித்தல்

சித்திரை மாதம் 25ம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் எம்.எஸ்.எவ் மகப்பேற்று வைத்தியர்கள் சேவையில் இருக்கமாட்டார்கள். அவர்கள் தமது சேவையை சித்திரை மாதம் 30ஆம் திகதியிலிருந்து மீண்டும் ஆரம்பிப்பார்கள் என்பதை அறியத்தருகின்றார்கள்.

**எம்.எஸ்.எவ்.கொலண்ட்**
**இணைப்பாளர்,**
**புதுக்குடியிருப்பு.**

(2846)

---

# வடக்கு கிழக்கு மாகாண சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நீகோட்)

## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

## கடன் இலக்கம் - 1846 - ஸ்ரீ (எஸ்.எவ்)

### முல்லைத்தீவு மாவட்டத்தில் சமூக மீளமைப்பு உப திட்டத்தை அமுல்படுத்துவதற்கு பங்குதாரராவதற்கான அரச சார்பற்ற நிறுவனங்களின் (என்.ஜி.ஓ) விருப்ப வெளிப்பாடு பற்றிய அழைப்பு

வடக்கு கிழக்கு மாகாண சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. வடகிழக்கின் இன முரண்பாட்டினால் மக்களின் குறிப்பாக உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளான நிவாரணம், புனரமைப்பு வேலைகளுக்கு மேலும் வலுவூட்டி பங்களிப்புச் செய்வதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இத்திட்டம் வடகிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களில் செயற்படுவதோடு விடுவிக்கப்பட்ட, விடுவிக்கப்படாத பகுதிகளையும் உள்ளடக்கியதாகும்.

இத்திட்டம் அரசாங்க திணைக்களங்களின் உதவியுடன் (அரச திணைக்களங்கள், திட்ட வெளிக்கள உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள்) உள்ளூர் சமுதாய அமைப்புக்களினாலும், உள்ளூர் சமூகங்களினாலும் அமுல்படுத்தப்படும். இந்த சமூக அபிவிருத்தி உப திட்டங்கள் சமூகத்தை மையமாகக் கொண்ட சமூகத்தவர்களின் பூரண பங்களிப்போடு செயற்படுத்தப்படும், இத்திட்டத்தில் பயன் பெறும் சமூகத்தினர் இத்திட்டத்தை திட்டமிடுவதிலும், அமுல் நடத்துவதிலும் இத்திட்டத்தின் அன்றாட அபிவிருத்தி வேலைகளைக் கண்காணிப்பதிலும் முற்றாகப் பங்களிப்புச் செய்வதை உறுதிப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்திட்டத்தை அமுல்நடத்துவதற்காக சில கிராமங்கள் ஆரம்பத்தில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வெற்றிகரமான செயற்பாடுகளைப் பொறுத்து மேலும் பல கிராமங்கள் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

ஆரம்பகட்டமாக பின்வரும் கிராமங்களில் இனங்காணப்பட்ட சமூகத்தினரிடையே சமூக அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துவதற்கும், சமூகத்தை அபிவிருத்திக்கு தயார்படுத்துவதற்கும், வளங்களை ஒன்றுபடுத்துவதற்கும், நிறுவன ரீதியான அபிவிருத்தியை உருவாக்குவதற்கும் எற்கனவே வடக்கு கிழக்கில் திட்டங்களை செயற்படுத்தும் தகுதிவாய்ந்த அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து விருப்பத்தை வெளிப்படுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

| மாவட்டம் | உதவி அரசாங்க அதிபர் பிரிவு | கிராமம் |
|---|---|---|
| முல்லைத்தீவு | மாந்தை கிழக்கு | பூவரசன்குளம் |

ஆர்வமுடைய அரச சார்பற்ற நிறுவனம் இது பற்றிய மேலதிக விபரங்களை வேலை நாட்களில் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபரிடம் இருந்து (முல்லைத்தீவு மாவட்டம், தொலைபேசி 024-22402, தொலைநகரி 024-20592) பெற்றுக் கொள்ளலாம்.

இத்திட்டத்தை அமுல்நடத்த விரும்பும் தகுதிவாய்ந்த அரச சார்பற்ற நிறுவனம் தங்களுடைய விருப்பத் தெரிவை மாவட்ட செயலாளருக்கு/ அரசாங்க அதிபருக்கு 02-05-2003 மாலை 3.00 மணிக்கு முன்பதாகத் தெரிவிக்க வேண்டும்.

விருப்பத் தெரிவை அறிவிக்கும் பொழுது பின்வரும் விபரங்களை அது உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

01. விண்ணப்பிக்கும் நிறுவனம் பற்றிய விபரங்கள், நிறுவனத்தின் நோக்கம், முகவரி, தொலைபேசி இலக்கம், சட்டரீதியான பதிவுசெய்த விபரங்கள், ஆளணிகள், நிறுவன ஒழுங்கமைப்பு, கிளைக்காரியாலயம் முதலியன.
02. தொழில் சார் அனுபவமுடைய நிபுணர்களின் எண்ணிக்கையையும் நிபுணத்துவம் பெற்ற துறையையும்.
03. வட கிழக்கு மாகாணத்தில் புனரமைப்பு சமூக மீளமைப்பு, வேலைகளில் உள்ள அனுபவம்.
04. விசேடமாக வடகிழக்கில் சமூக ஒருங்கிணைத்தல், சமூகப் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள், சிறு குழுக்களை உருவாக்குதல், சிறிய கடன் நடவடிக்கைகளை உருவாக்குதல் ஆகியவற்றில் உள்ள அனுபவம்.
05. வடகிழக்கில் தற்போது தாங்கள் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்தொகையையும், கடந்த ஐந்து வருடங்களாக நடைமுறைப்படுத்திய வேலைத்திட்டங்களின் விபரங்களையும்.
06. இக் குறிப்பிட்ட துறையில் சாதித்த குறிப்பிடத்தக்க சாதனைகள்.
07. விருப்பத் தெரிவிற்கான வேறு ஏதாவது தகவல்கள்.

எல்லா ஆவணங்களும் விண்ணப்பமும் அந்தரங்கமாகப் பேணிக் காக்கப்படும் என்பதையும் அவைகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**திருமதி. இமெல்டா சுகுமார்,**
**மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்,**
**முல்லைத்தீவு மாவட்டம்.**

(சி-8083)



பாக்தாத்தில் எரிந்துகொண்டிருக்கும் எரிபொருள் அமைச்சின் கட்டடம் முன்பாக நிலை கொண்டிருக்கும் அமெரிக்கப் படையினர்

# 'சார்ஸ்' நோயின் தாக்கத்தினால் ஒரே நாளில் பன்னிருவர் மரணம்

## -சிங்கப்பூருக்கு வந்துள்ள பாரிய நெருக்கடி

சார்ஸ் எனப்படும் நிமோனியாக் காய்ச்சல் காரணமாக சிங்கப்பூரில் நேற்று முன்தினம் மாத்திரம் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

சிங்கப்பூர் சுதந்திரம்பெற்ற பின்னர் அந்த நாட்டில் ஏற்பட்ட மிகப் பெரிய நெருக்கடி இது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே சீனாவுக்கு அயல் நாடான வியட்நாம் தனது நீண்ட எல்லையை மூடிவிடுவது பற்றி ஆராய்ந்து வருகிறது. சார்ஸ் எனப்படும் மூச்சுத் திணறல் காய்ச்சலை கட்டுப்படுத்துவது இதன் நோக்கமாகும்.

சார்ஸ் நோய்க் காய்ச்சல் இருமல் மூலம் வெளியாகும் துளிகளின் மூலம் ஒருவரிடம் இருந்து மற்றவருக்கு பரவுகின்றது.

அது போலவே மாடிகளுக்குச் செல்வதற்காகப் பயன்படும் ஆள்தூக்கிகளின் பொத்தான்களை அழுத்துவதன் போதும் இந்த நோய் தொற்றலாம் என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை நெதர்லாந்தில் இருந்தும் மற்றுமொரு எச்சரிக்கை வந்துள்ளது. அந்த நாட்டின் மிருக வைத்தியர் ஒருவர் கோழிக்கு ஏற்படும் காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டு நிமோனியாக் காய்ச்சலினால் இறந்துள்ளார். கோழிகளில் இருந்து பல்வேறு வகையான காய்ச்சல் நோய்கள் உருவாகின்றன.

1997ம் ஆண்டு ஹொங்கொங் அதிகாரிகள் கோடிக்கணக்கான கோழிகள் வாத்துக்கள்மற்றும் ஏனைய பறவை இனங் களை நோய் காரணமாகக் கொல்ல வேண்டி ஏற்பட்டது. அந்தச் சமயத்தில் ஹொங் கொங்கில் ஆறு பேர் உயிரிழந் திருந்தனர்.

# வடகொரிய - அமெரிக்க நேரடிப் பேச்சுக்கள் திட்டமிட்டபடி நடைபெறுவதில் இழுபறி!

## ஆலோசனைக்குப் பின்பே இறுதி முடிவு

**வடகொரியா மற்றும் அமெரிக்கப் பிரதிநிதிகளுக்கிடையில் திட்டமிடப்பட்டிருக்கும் பேச்சுவார்த்தை குறித்து சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாரம் சீனத் தலைநகரில் இந்தப் பேச்சுக்கள் இடம்பெறும் என ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தன. வடகொரியாவின் நடவடிக்கைகளால் இந்த மாற்றம் ஏற்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது.**

எதனையும் அமெரிக்கா திட்டவட்டமாக எடுக்காது போயினும், சீனா ஜப்பான் தென் கொரிய நாடுகளுடன் கலந்தாலோசனை செய்த பின்பே பேச்சு வார்த்தைகளை முன்னெடுப்பது குறித்த இறுதி முடிவு எடுக்கப் படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஈராக் மீதான போரில் அமெரிக்கா, பிரிட்டன் படைகள் ஈட்டிக் கொண்ட அமெரிக்க வடகொரிய பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் சீன அரசின் அனுசரணையுடன் நேரடிப் பேச்சுக்களுக்கு திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும் வடகொரிய அணு உலைகளை இயக்குவதாக அறிவித்துள்ள நிலையில் இரு நாடுகளுக்கும் இடையில் மீண்டும் முறுகல் நிலை தோன்றியுள்ளது.


இந்நிலையில் பேச்சுக்கான இறுதியான நிலைப்பாட்டு வெற்றிகளை அடுத்து வடகொரியா தனது இறுக்கமான போக்கில் சிறிது தளர்வை ஏற்படுத்தியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் வடகொரியா உலக நாடுகளுக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் அதிகாரி ஒருவர் குற்றம் சாட்டியுள்ளார்.

வடகொரியாவின் அணுவாயுதம் மற்றும் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதத் திட்டங்களே இவற்றுக்குக் காரணம் என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும் வடகொரியாவின் ஆயுதங்களை உலக நாடுகள் கொள்வனவு செய்யக்கூடாது என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரங்களுக்கான ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் வடகொரியா மேற்கொண்டு வரும் ஆயுதத் தயாரிப்புகளைத் தடுத்து நிறுத்த அனைவரும் முன்வர வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.



வடகொரிய அணுவாயுதத் திட்டத்திற்கு எதிராக சோல் நகரில் குரலெழுப்பும் தென்கொரியர்

# இஸ்ரேலியப் படையினர் வெறியாட்டம்; ஐந்து பலஸ்தீனர்கள் உயிரிழப்பு!

பலஸ்தீனத்தில் இஸ்ரேலியப் படையினரின் தேடுதல் நடவடிக்கையொன்றில் ஐந்து பலஸ்தீனர்கள் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளனர்.

மேற்குக் கரை மற்றும் காஸா பகுதிகளிலேயே இஸ்ரேலியப் படையினர் இந்தத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

கொல்லப்பட்டவர்களில் பலஸ்தீனப் புகைப்படப் பிடிப்பாளர் ஒருவரும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேலிய இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதலின் போது மோதல்கள் இடம்பெற்ற தாக இஸ்ரேலியப் படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பிரிட்டனின் சௌத்வேல்ஸில் பற்றியெரியும் காட்டுத்தீயைப் படத்தில் காண்க.



பாக்தாத்தின் மத்தியிலுள்ள கராடா வீதியில் அணிவகுத்துச் செல்லும் அமெரிக்க டாங்கிகள்

## வேலை நிறுத்தம் தொடர்கிறது

இந்தியாவில் பார ஊர்திகள் சம்மேளனத்தின் அரசிற்கெதிரான வேலை நிறுத்தம் நேற்று ஏழாவது நாளாகத் தொடர்ந்தது. இதனால், அத்தியாவசிய சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் நாட்டின் பொருளாதாரத்திற்கும் பலத்த அடியாக அமைந்துள்ளது.

# 7000 யுத்தக் கைதிகள் ஈராக்கில் தடுத்து வைப்பு

(வாஷிங்டன்)

887 ஈராக் யுத்தக் கைதிகளை விடுதலை செய்ய அமெரிக்க கூட்டுப் படையினர் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மேலும் 7000 யுத்தக் கைதிகளை சிறை வைத்துள்ளதாக அமெரிக்க பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். இவர்களிலும் விடுதலை செய்யக் கூடியவர்கள் உள்ளனரா என்பது பற்றி ஆராய்ந்து வருவதாக அவர்கள் கூறுகின்றனர்.

விடுதலை செய்ய முடியாத நிலையில் உள்ளவர்களை ஈராக்கில் ஏற்படுத்தப்படவுள்ள புதிய அரசாங்கத்திடம் ஒப்படைப்பதற்கு அமெரிக்கப் படையினர் உத்தேசித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜெனீவா உடன்படிக்கைக்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

# றேடாருக்குப் புலப்படாத கப்பலை இந்தியா தயாரிப்பு

(புதுடில்லி)

றேடார் கருவிகளால் அடையாளம் காணமுடியாத கப்பலை இந்தியா தயாரித்துள்ளது.

'சிவாலிக்' என்று பெயரிடப் பட்டுள்ள இந்தக் கப்பல் முற்றிலுமாக இந்தியாவில் தயாரிக் கப்பட்டது எனவும் 2005ம் ஆண்டு இக்கப்பல் கடற்படையிடம் ஒப்படைக்கப்படும் எனவும் கூறப்படுகின்றது.

இந்தக் கப்பலைத் தயாரித்திருப்பதன் மூலம் இது போன்ற கப்பல்களை வைத்திருக்கும் பிரான்ஸ் சீனா, ரஷ்யா, அமெரிக்கா, தென்கொரியா ஆகிய நாடுகளின் வரிசையில் இந்தியாவும் இணைந்துள்ளது.

இந்தக் கப்பலின் விலை 700 கோடி ரூபா என்றும் தற்போது இரண்டு மேலதிக கப்பல்கள் இந்தியப் படையினரால் உருவாக் கப்பட்டு வருவதாகவும் படைத் துறை வட்டாரங்கள் தெரிவித் திருக்கின்றன.

# தமிழ் மக்களுக்கு நீதியான தீர்வு கிடைத்தாலே நாட்டில் அமைதி, சமாதானம் நிலைக்கும்!

## - வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்

(வவுனியா)

**அமைதியும், நிரந்தர சமாதானமும் இந்த நாட்டில் தொடர வேண்டுமானால் தமிழ் மக்களுக்கு நீதியான அரசியல் தீர்வு கிடைக்கவேண்டும். இவ்வாறு வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார்.**

இந்த நீதியான அரசியல் தீர்வு கிடைக்கச் செய்ய வேண்டிய கடப்பாடு அரசிடமே உள்ளது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று முன்தினம் அன்னை பூபதி அவர்களின் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

இந்த நாட்டில் வாழும் தமிழ், சிங்கள மக்கள் நிம்மதியுடன் வாழ வேண்டும் என்ற சிந்தனையுடனேயே புலிகள் சமாதானத்தின் மீது அதிக கவனம் செலுத்தி வெளிநாடுகளில் நடைபெறும் பேச்சுக்களில் பங்கேற்று வருகின்றனர் என்றார்.

# பாதாள உலக குழு கைது

பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர் உட்பட 05 பேரை கடவத்தைப் பொலிசார் கடந்த வியாழக்கிழமை கைது செய்துள்ளனர். சுமார் 05 லட்சம் ரூபா பெறுமதியான முச்சக்கர வண்டிகளையும் வெளிநாட்டுத் துப்பாக்கி வகைகளைச் சேர்ந்த ரவைகள் சிலவற்றையும் பல லட்ச ரூபா பெறுதியான வெளிநாட்டு நாணயத் தாள்களையும் இவர்கள் கைப்பற்றியுள்ளனர்.

# அநுராதபுரத்தில் கோர வாகன விபத்து! அறுவர் பலி; 18 பேர் படுகாயம்!

அநுராதபுரத்தில் இடம்பெற்ற கோர வாகன விபத்தில் ஆறு பொதுமக்கள் பலியானதுடன் 18 பேர் படுகாயங்களுக்குள்ளாகினர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அநுராதபுரம் கல்குளம் ஞானிக்குளம் பகுதியில் இடம்பெற்ற மேற்படி வாகன விபத்தில் பலர் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் மிகவும் மோசமான நிலையில் உள்ளோர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சொகுசு பஸ் ஒன்று மற்றுமொரு பஸ்சுடன் மோதிய பின்னர் பின்னால் வந்த வான் ஒன்றுடனும் மோதியதிலேயே இவ் விபத்து நேர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சீரான போக்குவரத்தை மேற்கொள்ளக் கோரிக்கை

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பகுதியில் கிளிநொச்சிக்கும் இராமநாதபுரத்திற்குமான போக்குவரத்துப் பேருந்துகள் சீரின்மையால் மக்கள் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

தற்போது இராமநாதபுரத்தில் இருந்து, காலை 6 மணிக்கு புளியங்குளத்திற்கும் காலை 7 மணிக்கு ஸ்கந்தபுரத்திற்கும் பேருந்துகள் புறப்படுகின்றன. இவ்விரண்டு பேருந்துகளும் மாலை 5 மணிக்கும், இரவு 8 மணிக்கும் மீண்டும் திரும்புகின்றன. இப்பிரதான வழி ஊடாக மல்லாவிக்கும் புதுக்குடியிருப்புக்குமான பேருந்துக்கள் சேவையில் ஈடுபடுகின்றன. அவை சன நெருக்கடிகள் மத்தியிலேயே சேவையை மேற்கொள்கின்றன. இப்பேருந்துகள் குறிப்பிட்ட சில நேரங்களில் ஒன்றன் பின் ஒன்றாகவே சேவையை மேற்கொள்கின்றன. (12)

# தமிழர் தாயகத்தை மீளக் கட்டியெழுப்ப தமிழ் தொழில்நுட்பவியலாளருக்கு அழைப்பு!

## - சர்வதேச ரீதியில் ஒருங்கிணைக்க முயற்சி

போரினால் சீரழிந்திருக்கும் தமிழர் தாயகத்தைக் கட்டியெழுப்ப உலகெங்கிலும் உள்ள தமிழ் தொழில்நுட்பவியலாளர்கள் முன்வர வேண்டும் என சர்வதேச தமிழ் தொழில்நுட்பவியலாளர் கழகம் அழைப்பு விடுத்துள்ளது.

உலகெங்கிலும் உள்ள தமிழ் தொழில்நுட்பவியலாளர்களை ஒருங்கிணைக்கும் நோக்கில் இந்த அமைப்பு அமெரிக்காவில் உருவாக்கப்பட்டுள்ளது. வன்னி 'ரெக்' என்ற திட்டத்தின் கீழ் வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள உலகம் முழுவதிலும் உள்ள தமிழ் தொழில்நுட்ப நிபுணர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று இந்த அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

# கவனிப்பாரற்ற நிலையில் தமிழ்ப் பகுதி கிராம நீதிமன்றம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் நகரப் பிரதேச சபையின் பிரிவிலுள்ள தமிழ்ப் பகுதி (ஏறாவூர்-05ம் குறிச்சி) யில் கடந்த 1979ம் ஆண்டு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராக இருந்த தேவநாயகம் அவர்களினால் அடிக்கல் நாட்டப்பட்டு அமைக்கப்பட்ட கிராம நீதிமன்றத்தில் வாழைச்சேனை - தன்னா முனை வரையுமான மக்களுடைய நீதி தொடர்பான வேலைகள் இங்கு நடைபெற்றது.

கடந்த 1990ம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தின் போதும், இராணுவ நடவடிக்கைகளாலும் இயங்காமல் இருந்தது. இற்றைவரைக்கும் கவனிப்பாரற்ற நிலையில் இருக்கின்றது.

இதேவேளை வாழைச்சேனையில் கடந்த வருடம் இதே கிராம நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டது. இது தொடர்பாக மாவட்ட அரச அதிபர், புனர்வாழ்வு அமைச்சர், நீதித்துறை அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்தும் இக்கட்டடத்திற்கு எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையென பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

# உமாதேவி கொலை வழக்கில் உதவ பொலிஸ் திணைக்களம் பின்னடிப்பு!

(கொழும்பு)

நாவலப்பிட்டியில் படுகொலை செய்யப்பட்ட உமாதேவியின் உடல் உறுப்புக்களை மரபணு பரிசோதனைக்கு உட்படுத்தச் செலவாகும் தொகையை பொலிஸ் திணைக்களம் செலுத்த முன்வராததால், மரபணு ஆய்வுகள் தாமதப்படுத்தப்பட்டு வருகிறது.

நாவலப்பிட்டியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய மாணவி படுகொலைச் சம்பவம் தொடர்பான தடயப்பொருட்களாகப் பெறப் பட்ட உடலுறுப்புக்கள் சில நீதிமன்ற உத்தரவின் பேரில் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன.

இச்சோதனைக்கு சுமார் 35,000 ரூபா செலவாகுமென மரபணு ஆய்வுத் திணைக்களம் தெரிவித்திருந்தது.

இதனை பொலிஸ் திணைக்களம் செலுத்துவதே வழக்கமாகும்.

எனினும் பொலிஸ் திணைக்களத்தில் தற்போது நிதி வசதியில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளதால் மரபணு சோதனைகள் தாமதமாகி வருகின்றன. எனவே இதற்கான நிதியை பொது மக்களிடமிருந்து சேகரிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மரதன் ஓட்டப்போட்டியில் 12 வயதுச் சிறுவர்கள் சாதனை!

(மட்டக்களப்பு)

தியாக தீபம் அன்னை பூபதியின் 15 ஆவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 16.04.2003 தொடக்கம் 20.04.2003 வரை ஏறாவூர் விவேகாநந்தா சன சமூக நிலையம் நடாத்திய மாபெரும் விளையாட்டுப் போட்டியில், நேற்று முன் தினம் இடம்பெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் சிறுவர்கள் சாதனை படைத்துள்ளனர்.



மரதன் ஓட்டப்போட்டியில் சாதனை படைத்த சிறுவர்களையே படத்தில் காண்கிறீர்கள்.

இந்நிகழ்வு காலை 7.15 மணியளவில் ஆரம்பமானது. இம் மரதன் ஓட்டப்போட்டியில் 50ற்கு மேற்பட்ட ஆண்கள் கலந்து கொண்டனர். இதில் செங்கலடி மத்திய கல்லூரியைச் சேர்ந்த மாணவன் இராசலிங்கம் - இளங்கோ (வயது 12) 36 கிலோ மீற்றர் தூரத்தினை ஒரு மணித்தியாலம் 58 நிமிடங்களில் ஓடி முடித்து சாதனை படைத்துள்ளார். இம் மரதன் ஓட்டப் போட்டியில் இவர் 12ஆவது இடத்திற்கு வந்தது குறிப்பிடத்தக்கது.

இதன் அடுத்த நிகழ்வாக பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி ஆரம்பமானது. பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் 28ற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்விலும் செங்கலடி மத்திய கல்லூரி மாணவி காயத்திரி-இந்துநாதன் (வயது 12) என்பவர் 12 கிலோமீற்றர் தூரத்தை 30 நிமிடத்தில் ஓடி முதலாவது இடத்திற்கு வந்ததுடன் சாதனையும் படைத்துள்ளார்.

# சிறிலங்கா காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அரசினால் தனியாருக்கு விற்பனை

(கொழும்பு)

சிறிலங்கா காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தனியார் மயபடுத்தப்பட்டுள்ளதாக 'பர்க்' நிறுவனம் அறிவித்துள்ளது.

சிறிலங்கா காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை வரையறுக்கப்பட்ட டிஸரிலரிஸ் நிறுவனத்திற்கு விற்கும் உடன்படிக்கை கடந்த வாரம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கையில் திறைசேரியின் பதில் செயலாளர் பாயிஸ் மொஹிதீன் கைசாத்திட்டுள்ளார். உடன்படிக்கையின் படி கூட்டுத்தாபனத்தின் 90 சதவீத பங்குகள் 'டிஸ்ரிலரிஸ்' நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், எஞ்சிய 10 சதவீத பங்குகள் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என பர்க் நிறுவனம் தெரிவித்துள்ளது.



மூதூர் கட்டைபறிச்சான் பகுதியிலிருந்து அச்சத்தின் காரணமாக இடம்பெயரும் மக்கள்.

540 கோடி ரூபா பெறுமதியுடைய கூட்டுத்தாபனத்தை 605 கோடி ரூபாவுக்கு கொள்வனவு செய்துள்ள 'டிஸ்ரிலரிஸ்' நிறுவனம் ஊழியர்களின் நலன்களைப் பேண உறுதி அளித்து உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. இந்தக் கொடுக்கல் வாங்கலின் பின்னர் அரசுக்கு காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மீது எந்தவித உரிமையும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நாடு முழுவதும் 60 கிளைகள் கொண்ட கூட்டுத்தாபனத்தின் ஊழியர் எண்ணிக்கை மூவாயிரமாகும். 2002ஆம் ஆண்டு கூட்டுத்தாபனம் எய்திய இலாபம் 75 கோடியே 30 லட்சமாகும்.

# மேம்பாட்டுக்காக ஏங்கும் வன்னி மாணவ சமூகம்!



கிளிநொச்சியில் உள்ள முக்கியத்துவம் வாய்ந்த அந்த நிறுவனம் என்றும் போல் அன்றும் சுறு சுறுப்புடன் இயங்கிக் கொண்டிருந்தது.

அங்கு பணிபுரிபவர் ஒருவர் எட்டாம் தரத்தில் கல்வி கற்கும் தனது மகனை அங்கு அழைத்து வந்திருந்தார். அந்த நிறுவன நடை முறைகளையும், செயற்பாடுகளையும் தனது மகனுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்பதே அவரின் நோக்கம்.

அந்த மாணவன் அங்குள்ள ஒவ்வொரு பகுதிகளுக்கும் சென்று அங்கு நடைபெறும் வேலைத் திட்டங்களை அவதானித்துக் கொண்டிருந்தான். வேலைகள் மற்றும் அங்குள்ள தொழில்நுட்பச் சாதனங்கள் தொடர்பாக அவன் தனக்கு ஏற்படும் சந்தேகங்களை அங்கு கடமையில் இருப்பவர்களிடம் கேட்டுத்தெரிந்து கொள்ள முற்பட்டான்.

இவனுடைய இந்த நடவடிக்கைகள் அங்கு நடைபெறும் வேலைகளுக்குச்சிறிது தடங்கலாக இருந்தாலும், அவனின் கேள்வியில் இருக்கின்ற மிக ஆழமான தேடலைப் புரிந்து கொண்டவர்கள் அது தொடர்பாக அவனுக்கு மிகவும் தெளிவான விளக்கங்களைச் சொன்னார்கள்.

அந்த நிறுவனத்தில் கிட்டத்தட்ட பத்துப் பிரிவுகள்வரை மிகவும் மாறுபட்ட செயற்பாடுகளுடன் இயங்குகின்றன.

இந்தச் சிறுவனின் நடவடிக்கைகளும் அவனின் கேள்விகளும் அங்கு கடமையில் இருந்த பலரை அந்தச் சிறுவன் தொடர்பாகச் சிந்திக்க வைத்தது.

ஒரு கட்டத்தில் அச் சிறுவன் அங்கிருந்த கணினிப் பிரிவுக்குள் சென்றான். அங்கு கணினி இயக்குனர்களைத் தவிர வேறு யாரும் அதற்கு முன்னுள்ள ஆசனத்தில் இருப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும், இச்சிறுவனுக்கு அங்குள்ள கணினி ஒன்றை இயக்க வேண்டும் போல் இருந்தது. தனது விருப்பத்தை அங்கிருந்த முதியவரான ஒரு ஊழியரிடம் தெரியப்படுத்தினான்.

இச்சிறுவனின் விவேகத்தைப் புரிந்து கொண்ட அவர் கணினிப் பகுதிக்குப் பொறுப்பானவரின் அனுமதியுடன் அவன் அதனை இயக்குவதற்கான ஏற்பாட்டினைச் செய்து கொடுத்துவிட்டு அவனது செயற்பாடுகளையும் கூர்ந்து அவதானித்தார்.

அச்சிறுவன் அக்கணினியை மிகப் பரிச்சயமான ஒருவர் இயக்குவது போல இயக்கிக்கொண்டிருந்தான். அதில் வரும் ஆங்கில அறிவித்தல்களை வாசித்து மிக வேகமாகக் கணினியை இயக்கிக் கொண்டிருந்தான்.

அங்குள்ள எல்லோருமே ஆச்சரியத்தில் வாய் பிளந்தார்கள்.

இது கற்பனைக் கதையல்ல. நேற்று அந்த நிறுவனத்தில் இடம்பெற்ற உண்மைச் சம்பவம்.

வன்னிப் பகுதியில் உள்ள எமது தமிழ் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் கணினியினைக் கண்ணால் கண்டதே கிடையாது. அதனைப் பார்ப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தாலுமே அதனது இயக்கம் தொடர்பாக அவர்களுக்கு எதுவும் தெரியாது.

இங்குள்ள பெரியோர்களே இந்த நிலையில் தான் இருக்கின்றார்கள் எனும்போது மாணவர்கள் எம்மாத்திரம்.

இத்தனைக்கும் அந்தச் சிறுவன் வவுனியாவில் உள்ள தமிழ்ப் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவன்.

தகவல் தொழில்நுட்பம் ஒரு பாடமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், அது தொடர்பான அறிவு எமது மாணவரிடையே இல்லை. அதனைப் பெறுவதற்கான வசதி வாய்ப்புக்களும் இல்லை.

தகவல் தொழில்நுட்பம் மாணவரிடையே விருத்தியடையவில்லை என்றே கூறவேண்டும். கணினிகளை வன்னிப் பகுதியில் உள்ள குறிப்பிட்ட சில பாடசாலைகளுக்கு மட்டுமே அரசு வழங்கியிருந்தாலும் முழுமையாக பாடசாலைகளுக்கு வழங்கப்படவில்லை. கணினிகளை வழங்கினாலும் அதனை இயக்குவதற்கு மின்பிறப்பாக்கிகள் வழங்கப்படவில்லை.

சிங்களப் பிரதேசங்கள் மற்றும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களைப் பொறுத்த வரை இவ்வாறான நிலைமை இல்லை. வன்னிப் பகுதியில் பெரும் பின்னடைவே உள்ளது.

உயர்தர வகுப்பிற்கு அறிமுகப்படுத்திய போதும் அது பயனுடையதாக இன்னும் அமையவில்லை. தற்போது சாதாரண தர மாணவர்களுக்கும் அறிமுகப் படுத்தப்போவதாகத் தெரிவித்துள்ளனர். இது இங்குள்ள மாணவர்களுக்குப் பெரும் பாதிப்பினையே ஏற்படுத்தும் என்றே கூறவேண்டும்.

தகவல் தொழில்நுட்ப அறிவை விரிவுபடுத்திக் கொள்வதற்கு, புதிய வசதி வாய்ப்புக்கள் ஆளணிகளை விரிவு படுத்திக் கொண்டால் மட்டுமே இது சாத்தியமாகும்.

மிகக் கடும் போர் நிலவிய காலத்திலும் இப்பிரதேச மாணவர்கள் தமது கல்வியிலும் பரீட்சைப் பெறு பேறுகளிலும் உயர்ந்த நிலையினையே எட்டியிருந்தனர். எல்லாவற்றிற்கும் தடை நிலவிய காலத்தில் அந்தச் சாதனை போற்றுதற்குரியதாகவே இருந்தது.

ஆனால், இன்றைய சமாதானக் காலத்திலும் இந்த நிலையில் துரிதமான மேம்பாடு கிடைக்கவில்லை என்பதே உண்மை.

எனவே, இந்த நிலையில் விரைவான மாற்றத்தினைக் கொண்டு வருவதற்கு கல்விச் சமூகம் முன்வரவேண்டும். இதற்கான தம்மாலான அரும் பணிகளை அவர்கள் முடிந்தவரை செயற்படுத்த வேண்டும். அதேபோன்று பெற்றோரும் இவ்விடயத்தில் அக்கறையுடையவர்களாக இருக்கவேண்டும்.

காட்சிப் பொருளாகவே இருக்கும் கணினிகள் எம் மாணவர்களின் தினசரி கையாளல் பொருளாக விரைவில் மாறும் என்றும் அதற்குச் சம்பந்தப் பட்டவர்கள் துரிதமாகச் செயலாற்றுவார்கள் எனவும் நம்புவோமாக.

**ஜெயக்குமார்**

# செம்மலை மகாவித்தியாலய புனரமைப்பிற்கு நிதியுதவி

(முல்லை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் செம்மலை மகாவித்தியாலயத்தின் புனரமைப்பிற்கு ஜேர்மன் கல்வி அபிவிருத்தி நிறுவனம் உதவ முன்வந்துள்ளது.

சிறிலங்கா விமானப் படையின் குண்டு வீச்சுக்களாலும் மணக்கிண்டிமலை இராணுவ முகாமிலிருந்து ஏவிய எறிகணை வீச்சுக்களாலும் மேற்படி பாடசாலை சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலைக்கான கட்டடங்கள், தளபாடங்கள், நீர்வடிகால் வசதி, மலசலகூடம் என்பனவற்றை அமைத்துக்கொள்வதற்கான நிதியினை வழங்குவதாக ஜேர்மன் கல்வி அபிவிருத்திக்குழு உறுதியளித்துள்ளது என கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (20)

## 2002ஆம் ஆண்டு காலத்தில்

# வாகன விபத்துக்களில் 2160 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் 2002ஆம் ஆண்டு இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 2150 பேர் உயிரிழந்துள்ளதாக அறிக்கைகள் வெளியாகியுள்ளன.

சிறிலங்காப் போக்குவரத்து, பொலிஸ் தலைமையகம் வெளியிட்ட அறிக்கையொன்றிலேயே இது தெரிய வந்துள்ளது.

இவற்றில் 351 பேர் மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரதமர் ரணிலை வீழ்த்தவேண்டிய அவசியம் முஸ்லிம் காங்கிரசுக்கு இல்லை

## பாராளுமன்ற உறுப்பினர் குழு கூறுகின்றது

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்ட ஐக்கிய தேசிய முன்னணியின் பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவை வீழ்த்த வேண்டிய அவசியம் தமக்கு இல்லையென முஸ்லிம் காங்கிரசின் பாராளுமன்ற உறுப்பினர்களின் அமைப்பு விடுத்துள்ள அறிக்கை கூறுகின்றது.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு சில சுயநலமிக்க அரசியல் கட்சிகள் மாறுபட்ட தகவல்களை ஊடகங்களுக்கு அளித்து வருவதாக அவ்வறிக்கை குற்றம் சாட்டுகின்றது. மூதூர் சம்பவத்தின் உண்மை நிலையை அறிந்து கொள்வதற்குத் தகுதியில்லாதவர்கள் முஸ்லிம் காங்கிரஸ் மீதும், ஹக்கீம் மீதும் சேறுபூச நினைப்பது முஸ்லிங்களுக்குச் செய்யும் ஒரு பெரும் துரோகம் என அவ்வறிக்கை மேலும் கூறுகின்றது.

# யாழ். மாவட்ட பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழியில் கருமமாற்ற ஏற்பாடு

யாழ்ப்பாணத்தில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும் அது சம்பந்தமாக நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிப்பது தமிழ் மொழியில் நடைபெறுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

வழக்குச் சம்பந்தமான விடயங்களில் மக்களுக்கு வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்கத்துடன் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக யாழ்ப்பாண நீதவான் விக்கிரைராஜா கூறுகின்றார். இது சம்பந்தமான யோசனைகளைத் தாம் யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் பொலிஸ் முறைப்பாடுகளை பதிவு செய்வதற்கும், நீதிமன்றத்திற்கு அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்கும் வசதியாக ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திற்கும் தமிழில் பணியாற்றக்கூடிய இரண்டு பொலிசாரை பொலிஸ்மா அதிபர் நியமிக்கவுள்ளார்.

# கேள்வி அறிவித்தல்

## கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு
## வடக்கு கிழக்கு மாகாணம், திருகோணமலை

01. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசானது இரண்டாவது பொதுக்கல்வித் திட்டத்தின் செலவுக்காக சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்திலிருந்து கடன் கிடைக்கப்பெற்றுள்ளது. இப்பணத்தில் ஒரு பகுதியைக் கீழே குறிப்பிடப்படும் 26 ஒப்பந்தங்களுக்குப் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது."IBRD கடன் மற்றும் IDA கடனின் கீழான விநியோகம்", வழிகாட்டிகள் குறிப்பிடப்பட்டவாறு தகைமையுள்ள நிறுவனங்களிடமிருந்து கேள்விகள் சமர்ப்பிக்கப்படலாம். கேள்வித்தரவுகளில் குறிப்பிடப்பட்டவாறு இக்ராட்டுடன் பதிவுசெய்த உள்ளூர் நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் கேள்வி சமர்ப்பிக்கலாம். அத்துடன் இலங்கை தேசிய கட்டட ஒப்பந்தக்காரர் சங்கத்தின் அங்கத்தவராக இருத்தல் வேண்டும் (NCCASL).

02) செயலாளர், கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம், திருகோணமலை அவர்களால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பின்வரும் கட்டடத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்கு/ புனரமைப்பதற்கு கோரப்படுகின்றது.

| இல | கேள்விக் குறியீட்டு இல | வேலை விபரம் | பதிவுத் தரம் |
|---|---|---|---|
| 01 | ஜீசுபி2 /என்சு /முல் /துணு/ 2003-27துணுக்காய் | 01. மு /நட்டான் கண்டல் ஜி.ரி.எம்.எஸ் 100'X25' இரண்டு வகுப்பறைக்கட்டடமும், ஆண்கள், பெண்கள் சலகூடமும் மலசலகூடமும் நிர்மாணித்தல்.<br>02. மு/ஒட்டுசுட்டான் ம.வித்தியாலயம் அ.ஆண்கள், பெண்கள் சலகூடமும் மலசலகூடமும் நிர்மாணித்தல். | எம் 6 |
| 02 | ஜீசுபி2/ என்சு /முல் /துணு/ 2002-28 துணுக்காய் | 01. மு/பளை பன்னி ஜி.ரி.எம்.எஸ். 60'X25' வகுப்பறைக்கட்டடமும், மலசலகூடமும், இரண்டு சலகூடமும் நிர்மாணித்தல்.<br>ஆ.மு/பாண்டியன்குளம் ம.வித்தி. 100'X25' இரண்டு வகுப்பறைக் கட்டடமும் இரண்டு மலசலகூடமும் நிர்மாணித்தல். | எம் 6 |
| 03 | ஜீசுபி2 /என்சு /யா /தீவு / 2003-29 தீவுப்பகுதி | 01. யா/கலாநிதி ஏ.தியாகராஜா மகாவித்தியாலயம்<br>அ.110'X25' 60'X25' வகுப்பறைக்கட்டடமும் மேல்மாடி மிகுதி வேலையும் நிர்மாணித்தல்<br>ஆ.யா/புங்குடுதீவு மகாவித்தியாலயம் அ.1[illegible]'X25' வகுப்பறைக்கட்டடமும் கணினி அறையும் நூலக அறையும் நிர்மாணித்தல்<br>இ.யா/ வேலணை மேற்கு நடராஜா வித்தி.<br>90'X25', இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடமும், விஞ்ஞான ஆய்வுகூடமும், கணினி அறையும் காரியாலய அறையும் நிர்மாணித்தல். | எம் 5 |
| 04 | ஜீசுபி2 /என்சு /மன்/மடு/2003-30 மடு | 01. மன/ இரணை இலுப்பைக்குளம் ஜி.ரி.எம்.எஸ். அ.80'X25' வகுப்பறைக் கட்டடமும், செயற்பாட்டறையும் நிர்மாணித்தல்.<br>ஆ.கிணறும் 02 சலகூடமும், 02 மலசலகூடமும், 02 இணைந்த மலசலகூடமும் நீர்வழுங்[illegible] நிர்மாணித்தல். | எம் 6 |
| 05 | ஜீசுபி2 /என்சு /மன்னார்/மடு 2003-31 மடு | 01.மன்/முள்ளிக்குளம் ஜி.ரி.எம்.எஸ். 80'X25' இரண்டு வகுப்பறைக் கட்டடமும், செயற்பாட்டறையும் நிர்மாணித்தல்.<br>ஆ.இணைந்த 02 மலசலகூடமும் 02 சலகூடமும் நீர் வழுங்கலும் நிர்மாணித்தல். | எம் 6 |
| 06 | ஜீசுபி2 /என்சு /மன்னார்/மடு/ 2003-32 மடு | 01.மன்/மூன்றாம்பிட்டி ஜி.ரி.எம்.எஸ்.80'X25' இரண்டு வகுப்பறைக் கட்டடமும், செயற்பாட்டறையும் நிர்மாணித்தல்.<br>ஆ.02 இணைந்த மலசலகூடமும் 02 சலகூடமும் நீர்வழுங்கலும் நிர்மாணித்தல். | எம் 6 |
| 07 | ஜீசுபி2 /என்சு /மன்னார்/மடு/ 2003-33 மடு | 01.மன்/கூரன் ஜி.ரி.எம்.எஸ் 80'X25' இரண்டு வகுப்பறைக்கட்டடமும், பலநோக்கு மண்டபமும் நிர்மாணித்தல்.<br>ஆ.02 இணைந்த மலசலகூடமும் சலகூடமும் நீர் வழுங்கலும் நிர்மாணித்தல். | எம் 6 |
| 08 | ஜீசுபி2 /என்சு /மன்/மன்/ 2003-35 மன்னார். | 01.மன்/ பரிகரிகண்டல் ஜி.ரி.எம்.எஸ் அ.40'X25' நூலக அறை நிர்மாணித்தல்.<br>02.மன்/பாத்திமா மு.ம.வித்தி 40'X25' நூலக அறை நிர்மாணித்தல். | எம் 7 |
| 09 | ஜீசுபி2 /என்சு /மு/மு /2003-37 முல்லைத்தீவு | 01.மு/செம்மலை மகாவித்தி. 40'X25' நூலக அறை நிர்மாணித்தல் 02. மு/தேவிபுரம் ஜி.ரி.எம்.எஸ். 40'X25' நூலகம் நிர்மாணித்தல். | எம் 7 |
| 10 | ஜீசுபி2 /என்சு /கிளி/கிளி 2003-38 கிளிநொச்சி | 01. கிளி/ இயக்கச்சி எச்.ரி.எம்.எஸ். அ.40'X25' நூலகம் நிர்மாணித்தல்.<br>02. கிளி/மாசார் ஜி.ரி.எம்.எஸ். அ.40'X25' நூலகம் நிர்மாணித்தல். | எம் 7 |
| 11 | ஜீசுபி2 /என்சு /கிளி/கிளி / 2003-39 கிளிநொச்சி | 01.கிளி /முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தி. அ.60'X25' நூலகம் நிர்மாணித்தல். 02. கிளி/ பரந்தன் ஜி.ரி.எம்.எஸ். அ.40'X25' நூலகம் நிர்மாணித்தல். | எம் 7 |
| 12 | ஜீசுபி2/என்சு/கிளி/கிளி/2002-40 கிளிநொச்சி. | 01.கிளி/செல்லியதீவு ஜி.ரி.எம்.எஸ். 40'X25' நூலகம் நிர்மாணித்தல்.<br>02.கிளி/ கிராஞ்சி ஜி.ரி.எம்.எஸ்.40'X25' நூலகம் நிர்மாணித்தல். | எம் 7 |
| 13 | ஜீசுபி2/என்சு/கிளி/கிளி/ 2003-28 கிளிநொச்சி | 01. கிளி/ இராமநாதபுரம் மகா வித்தி. 110'X25' இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடமும், 02 சலகூடமும் 06 மலசலகூடமும் , நிர்மாணித்தலும், தண்ணீர் தாங்கியும். | எம் 6 |
| 14 | ஜீசுபி2/என்சு/கிளி/கிளி/ 2002-28ஏ கிளிநொச்சி | 01.கிளி/இராமநாதபுரம் மகா.வித்தி. 110'X25' இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடம், நிர்மாணித்தல். | எம் 6 |
| 15 | ஜீசுபி2/என்சு/கிளி/கிளி/ 2002-28பி கிளிநொச்சி | 01. கிளி/இராமநாதபுரம் மகா. வித்தி. க.பொ.த. (சா.த) விஞ்ஞான ஆய்வுகூடம், பொது அறை, செயற்பாட்டு அறை, நடன அறை, 40'X25' நூலகக் கட்டடம் நிர்மாணித்தல். | எம் 6 |
| 16 | ஜீசுபி2/என்சு/கிளி/கிளி/ 2003-03 கிளிநொச்சி | 01. கிளி / கிளிநொச்சி இந்துக்கல்லூரி 110'X25' இரண்டு மாடி வகுப்பறைக்கட்டடமும், செயற்பாட்டு அறையும் நிர்மாணித்தல். | எம் 5 |
| 17 | ஜீசுபி2/என்சு/கிளி/கிளி/ 2003-03ஏ கிளிநொச்சி | 01. கிளி / கிளிநொச்சி இந்துக்கல்லூரி க.பொ.த. (உ.த) விஞ்ஞான ஆய்வு கூடம், க.பொ.த. (சா.த) விஞ்ஞான ஆய்வுக்கூடம், பொது அறை, சங்கீத அறை, நூலகக்கட்டடம் நிர்மாணித்தல். | எம் 5 |
| 18 | ஜீசுபி2/என்சு/கிளி/கிளி/ 2003-03பி தீவுப் | 01.கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி 04 சலகூடமும் 06 மலசலகூடமும், நிர்மாணித்தலும், தண்ணீர் தாங்கியும். | எம் 6 |
| 19 | ஜீசுபி2/என்சு/யா/தென்/ 2003-41 தென்மராட்சி | 01. யா/ மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகா வித்தி 33.5'X7.5' இரண்டு மாடி வகுப்பறைக் கட்டமும், தண்ணீர் தாங்கியும், உபகரணமும் நிர்மாணித்தல். 02. யா/சாவகச்சேரி பெண்கள் கல்லூரி 33.5'X7.5' இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடமும், தண்ணீர்தாங்கியும், உபகரணமும் நிர்மாணித்தல். | எம் 5 |
| 20 | ஜீசுபி2/என்சு/மட்/மட்/ 2003-26 மட்டக்களப்பு | 01. மட்/ இந்துக் கல்லூரி அ. 110'X25' மூன்று மாடி வகுப்பறைக் கட்டடம், (ஆரம்பப் பிரிவு) மிகுதி வேலை பூரணப்படுத்தல்.<br>ஆ. 70'X25' மூன்று மாடி வகுப்பறைக் கட்டடத்தை 110'X25' மூன்றுமாடிவகுப்பறைக் கட்டடமாக நீடித்தலும் இ. இரண்டு சலகூடமும், ஒரு மலசல கூடமும் நிர்மாணித்தல். | எம் 6 |
| 21 | ஜீசுபி2/என்சு/மட்/மட்/2003-01 மட்டக்களப்பு | மட்/ பிள்ளையாரடி ஜி.ரி.எம்.எஸ்.<br>01. 110'X25' இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடம், (ஆரம்பப் பிரிவு) மிகுதி வேலை பூரணப்படுத்தல்<br>02. இரண்டு சலகூடமும், இரண்டு மலசலகூடமும், தண்ணீர்தாங்கியும் நிர்மாணித்தல்.<br>மட்/ ஏறாவூர்த் தமிழ் மகா வித்தி. 110'X25' மூன்று மாடி வகுப்பறைக் கட்டடமாக நீடித்தலும் இரண்டு சலகூடமும் 110'X25' இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடமும், (ஆரம்பப் பிரிவு) விருத்தி செய்தல். | எம் 5 |
| 22 | ஜீசுபி2/என்சு/அம்/மகா/ 2002-25 மகா ஓயா | 01.அம்/பொறபோல வித்தியாலயம் 60'X20' வகுப்பறைக்கட்டடம் இரண்டு சலகூடமும், மூன்று மலசலகூடமும், நிர்மாணித்தல்.<br>02.அம்/புலாவெலவித்தியாலயம் 60'X20' வகுப்பறைக்கட்டடமும் இரண்டு மலசலகூடமும், கிணறும் நிர்மாணித்தல். | எம் 7 |
| 23 | ஜீசுபி2/என்சு/முல்/முல்/ 2002-27 முல்லைத்தீவு | 01.முல்லைத்தீவு தேவிபுரம் ஜி.ரி.எம்.எஸ். அ.70'X25' காரியாலயமும் வகுப்பறைக்கட்டடமும் நிர்மாணித்தல்.<br>ஆ. 02 மலசலகூடமும் 02 சலகூடமும் நிர்மாணித்தல். 02.மு/கைவேலி கணேசா வித்தியாலயம் அ 02 மலசலகூடமும் 02 சலகூடமும் நிர்மாணித்தல்.03மு/செம்மலை மகாவித்தியாலயம் அ. 70'X25' காரியாலயமும் வகுப்பறைக்கட்டடமும், சங்கீதஅறையும் நிர்மாணித்தல். ஆ. 02 மலசலகூடமும் 02 சலகூடமும் நிர்மாணித்தல்.<br>04. மு/முல்லைத்தீவு மகாவித்தியாலயம். அ.70'X25' காரியாலயமும் வகுப்பறைக்கட்டடமும், சங்கீத அறையும் நிர்மாணித்தல்.<br>ஆ. 02 மலசலகூடமும், 02 சலகூடமும் நிர்மாணித்தல் இ.கிணறு நிர்மாணித்தல். | எம் 6 |
| 24 | ஜீசுபி2/என்சு/யா/வலி/ 2003-08 வலிகாமம். | 01. யா/அளவெட்டி அருணாசலம் வித்தி. அ.40'X25' நூலகம் நிர்மாணித்தல்.<br>02. யா/சுன்னாகம் மயிலணி சைவ வித்தி. 40'X25' நூலகம் நிர்மாணித்தல்.<br>03. யா/இழுவாலை ஆர்.சி.ரி.எம்.எஸ். 30'X25' நூலகம் நிர்மாணித்தல். | எம் 6 |
| 25 | ஜீசுபி2/என்சு/யா/தென்/ 2003-09 தென்மராட்சி | 01. யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் 40'X25' நூலகம் நிர்மாணித்தல்.<br>02. யா /கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தி 40'X25' நூலகம் நிர்மாணித்தல்.<br>03. யா/மந்துவில் ஸ்ரீபார்வதி வித்தி. 40'X25' நூலகம் நிர்மாணித்தல். | எம் 6 |
| 26 | ஜீசுபி2 /என்சு /முல்/துணு / 2003-16 துணுக்காய் | 01. மு/மல்லாவி மத்திய கல்லூரி 60'X25' நூலகம் நிர்மாணித்தல்.<br>02. மு/பாண்டியன்குளம் ம.வித்தி. 40'X25' நூலகம் நிர்மாணித்தல்.<br>03. மு/முத்தையன்கட்டு ஆர்.பி.ஜி.ரி.எம்.எஸ். 40'X25' நூலகம் நிர்மாணித்தல். | எம் 6 |

03. மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1,000/= மற்றும் மீளளிக்கப்படும் வைப்பாக ரூபா 5,000/= தரம் எம் 5க்கும், ரூபா4,000/= தரம்எம்.6க்கும், ரூபா 3,000/= தரம் எம்.7க்கும் அந்தந்த வலயக்கல்விப்பணிப்பாளர் அலுவலகத்தில் செலுத்தி 2003-05-12 ஆம் திகதி பி.ப.3.00 மணிவரை கேள்விப் பொதிகளுக்கான கேள்வி ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.

04. கேள்வி திறக்கப்பட்டதிலிருந்து கேள்வி 90 நாட்களுக்கும், கேள்விப்பிணை 120 நாட்களுக்கும் செல்லுபடியானதாக இருக்கவேண்டியதோடு ஒவ்வொரு கேள்வியும், கேள்வித்தரவில் குறிப்பிடப்பட்ட கேள்விப்பிணை இணைக்கப்பட்டு, 2003-05-20பி.ப.2.30 மணி அல்லது அதற்கு முன் தலைவர், கேள்விச் சபை, கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம், திருகோணமலை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது நேரில் அனுப்பப்படல் வேண்டும். அதேநேரம் கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி முன்னிலையில் இக்கேள்விகள் திறக்கப்படும்.

05. ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை அந்தந்த வலயக்கல்விப் பணிமனைகளில் இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

ஆர். தியாகலிங்கம்,
தலைவர் / செயலாளர், அமைச்சு கேள்விச் சபை,
கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு,
வடக்கு கிழக்கு மாகாணம், திருகோணமலை

(சி-7844)

## சிந்தனைக்கு



சிங்கள அரசின் திட்டமிட்ட ஒடுக்கு முறை காரணமாகவே நாம் சுயநிர்ணய உரிமைக் காகவும், அரசியல் சுதந்திரத்திற்காகவும் போராட்டத்தில் குதித்துள்ளோம்.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 21-04-2003

## மனோ நிலை மாறாதவர்களாக...

யுத்த நிறுத்த உடன்பாடு செய்து ஓராண்டு ஆகியும், சிறிலங்கா அரசாங்கத்திற்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள், பல சந்திப்புகள் இடம்பெற்றுள்ளபோதும் இச்சமாதான முயற்சி வெற்றிபெறுமா? இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு ஏற்படுமா? என்பது குறித்து மக்கள் மத்தியில் சந்தேகங்கள் இல்லாமல் இல்லை. அதற்கான காரணங்களும் நிராகரிக்க முடியாதவையாகவே உள்ளன.

இதற்கு அண்மைய மூதூர் சம்பவங்களில் இருந்தே சில உதாரணங்களைச் சுட்டிக் காட்டுதல் முடியும். சிறிலங்கா இராணுவம் யுத்த நிறுத்தத்தை விரும்பியோ விரும்பாமலோ கடைப்பிடித்து - சில மீறல்களுடன் - வரினும் அதன் மனோ நிலை அதாவது இன ரீதியான அதன் பார்வையில் மாற்றம் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

எடுத்துக்காட்டாகக் கடந்த வெள்ளிக்கிழமை முஸ்லீம் காடையர் வழி மறிக்கப்பட்ட வீதியைத் திறக்கக் கோரி கட்டைபறிச்சான் இராணுவ முகாம் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்த தமிழ் மக்கள் மீது முஸ்லிம் காடையர்கள் கைக்குண்டு வீச்சு நடத்தியதாகவும், அதைத் தொடர்ந்து அங்கிருந்த இராணுவத்தினர் தமிழ் மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததையும் சுட்டிக்காட்ட முடியும்.

உளப்பூர்வமாக சிறிலங்கா இராணுவம் சமாதானத்தை ஆதரிப்பதாக இருந்தால் முகாம் முன் ஆர்ப்பாட்டம் செய்த மக்களைக் கலைந்து போவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருத்தல் வேண்டும். அதுதான் சாத்தியப்படாது போனால்கூட, ஆர்ப்பாட்டம் செய்த மக்கள் மீது முஸ்லிம் காடையர்கள் தாக்குதல் நடத்தியதை தடுத்திருத்தல் வேண்டும். அதுவும்கூடச் சாத்தியமாகாதவிடத்து தாக்குதல் நடத்திய முஸ்லிம் காடையர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்திருத்தல் வேண்டும்.

ஆனால், இராணுவமோ இதற்கு மாறாக, முஸ்லிம் காடையர் குழுவால் தாக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் மீதே தாக்குதல் நடத்தியது. இதன் மூலம் ஒருவரையும் கொன்றது. இது ஒருவகையில், முஸ்லிம் காடையர்களுக்கு ஆதரவான அல்லது அவர்களின் நோக்கத்தை நிறைவு செய்வதற்கு இராணுவம் வழங்கிய ஒத்துழைப்புப் போன்றதேயாகும்.

இது மட்டுமல்ல மூதூர் கிழக்குப் பகுதிகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் போக முடியாத அளவிற்கு முஸ்லிம் காடையர்களால் வீதித்தடைகள் போடப்பட்டன. இது இராணுவத்தரப்பிற்கும் தெரியும். ஆனால் அவ்வீதித்தடையை அகற்றி மக்களுக்கு அத்தியவசியப்பொருட்கள் சென்றடைய இராணுவம் உதவவில்லை.

ஆனால், இது இராணுவத்தரப்பாலோ அன்றி சிறிலங்கா பொலிசாரினாலோ மேற்கொள்ளப்படமுடியாததொரு நடவடிக்கையல்ல. அதாவது, மேலதிக துருப்புக்களும், பொலிசாரும் குவிக்கப்பட்டுள்ளதோடு, பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தையும் அமுல் செய்பவர்களாகவும் இவர்களே உள்ளனர். இந்த நிலையில் இவ்வுணவுப்பொருள் விடயத்தில் இராணுவத்தரப்பு தமிழ் மக்களுக்கு ஒத்துழைக்க விரும்பவில்லை என்பதே உண்மையாகும்.

சிறிலங்கா இராணுவத்தரப்பு கிழக்கில் முஸ்லிம் காடையர்களை தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்துதல் என்பது புதியதொரு விடயமல்ல. இதற்குப் பிரதி பலனாக முஸ்லிம் காடையர்கள் தமிழர் மீது மேற்கொள்ளும் அராஜகங்களுக்கு சிறிலங்கா இராணுவம் ஒத்துழைத்தல் அன்றி பாராமுகமாக இருத்தல் என்பதும் வழமையானதே.

இவ் அனுசரித்த போக்கானது, யுத்தகாலத்தில் தொடங்கி இன்றுவரை தொடர்வதாகவே உள்ளது. முஸ்லிம்காடையர் கூட்டத்தை சில முஸ்லிம் அரசியல்வாதிகளும் தமது அபிலாஷைகளுக்கு பயன்படுத்திக்கொள்ள முற்படுவதினால், அரசியல் ரீதியிலும் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுகின்றது. அதிலும் ஆளும் கட்சிகளுக்கு முஸ்லீம் அரசியல்வாதிகளின் ஆதரவு தேவைப்படுவதன் காரணமாக முஸ்லிம் காடையர் கூட்டத்தின் அராஜகத்திற்குத் துணை போகின்றவர்களாகவே அவர்களும் உள்ளனர்.

இவ்வாறானதொரு நிலை தொடர்கையில் எவ்வாறு சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தீர்வொன்று எட்டப்பட முடியும் என தமிழ் மக்கள் நம்பிக்கைகொள்ள முடியும். சிறிலங்கா இராணுவத் தரப்பிலோ அரச அதிகாரிகள் மட்டத்திலோ மனமாற்றம் ஏற்படாதவிடத்து எவ்வாறு பிரச்சினைகளுக்கு தீர்வு எட்டப்படுமென உறுதி கொள்ள முடியும்? அவ்வாறு தான் எட்டப்படுமானாலும் அமுலாக்கப்படுமென எவ்வாறு நம்ப முடியும்?

இனப்பிரச்சினைக்கு சமாதானம் ஒன்று எட்டப்படவேண்டுமானால் முதலில் அதன் மீதான நம்பிக்கையை மக்கள் மத்தியில் அரசாங்கம் வளர்த்தெடுத்தல் வேண்டும். அதாவது, ஒடுக்குமுறைச் சிந்தனைகள் ஆட்சியாளர் மட்டத்திலிருந்து ஆயுதப்படை மற்றும் அரச அதிகாரிகள் மட்டம் வரை நீங்கவேண்டும். அவ்வாறு இல்லாது மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் யாவும் சந்தர்ப்பம்,சூழ்நிலை என்பனவற்றின் தேவை கருதியதாக மட்டுமே இருக்க முடியும்.

# தமிழ் மக்கள் மீதான வழக்குகளில் சிறிலங்கா நீதித்துறை பாரபட்சம்

### - மனித உரிமை அமைப்பு கண்டனம்

சிறிலங்கா நீதித்துறை தமிழ் மக்களுக்கு எதிரான வழக்குகளை பாரபட்சமாக நடத்திவருகின்றது என்று மனித உரிமை மற்றும் அபிவிருத்தி அமைப்பின் செயளாளர் கந்தசாமி தெரிவித்துள்ளார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சிறிலங்காப் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட சிவமணி,விஜிகலா ஆகியோரின் வழக்குகள் குறித்து கருத்து வெளியிட்ட அவர், குற்றம் சாட்டப்பட்ட சிறிலங்காப் படையினர் மீது இதுவரையில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆயினும் இதற்குப்பின் இடம் பெற்ற உடத்தலவின்ன கொலை வழக்கு விரைந்து நடத்தப்படுகின்றது என்று கூறிய அவர், தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான வழங்குகள் வேண்டுமென்றே இழுத்தடிக்கப்படுவதாகவும் சாடியுள்ளார்.

# நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு சமாதான முயற்சிகள் வழியமைத்துள்ளன

### - சர்வதேச நாணய நிதியம் கருத்து

இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான நடவடிக்கைகள் இந்த நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்லவும் பல்வேறு வழிகளில் வளர்ச்சியை ஏற்படுத்தவும் வழிவகுத்துள்ளதாக சர்வதேச நாணயநிதியத்தின் பிரதி நிர்வாகப் பணிப்பாளரும் பதில் தலைவருமான சுகிசாகி தெரிவித்துள்ளார்.

கடந்த இருபது வருடங்களாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கை தற்போது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருப்புமுனையைச் சந்தித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சிறிலங்கா அரசு வறுமையை ஒழிப்பதற்கும் பொருளாதாரத்தை சீரமைப்பதற்கும் மேற்கொண்டு வரும் நடவடிக்கை பாராட்டப்படக்கூடியது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசாங்கத்தின் திட்டங்கள் முழுமையாக வெற்றியடைவதற்கு நிரந்தர சமாதானம் ஏற்படுவது கட்டாயதேவையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறிலங்காவிற்கு சலுகையடிப்படையில் கடன்களை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக்குழு அங்கீகாரம் அளித்ததை அடுத்தே அவர் இதனைத் தெரிவித்ததாக அமெரிக்காவில் உள்ள தூதரகம் தெரிவித்துள்ளது.

# ஜே.வி.பி-சு.க இடையிலான ஒப்பந்தம் மே மாத நடுப்பகுதியில் கைச்சாத்து

### - சு.க. பொதுச் செயலர் அறிவிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பி.க்கும், சு.க.வுக்கும் இடையிலான உடன்படிக்கை மே மாதம் நடுப்பகுதியில் கைச்சாத்திடப்படும் என சு.க.வின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இந்த உடன்படிக்கையில் மைத்திரிபால சிறிசேனவும், ஜே.வி.பி. பொதுச் செயலாளர் டில்வின் சில்வாவும் கைச்சாத்திடவுள்ளனர். எதிர்வரும் மே முதலாம் திகதி இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என அநுரா பண்டாரநாயக்க எம்.பி. தெரிவித்திருந்தபோதிலும், அதற்கான வாய்ப்புக்கள் இல்லை என மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதன் படி மே மாத நடுப்பகுதியில் உடன்படிக்கை கைச்சாத்திட்ட பின்னர் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் குறித்து ஜே.வி.பி. ஸ்ரீல.சு.க. உறுப்பினர்கள் இணைந்து நாடளாவிய ரீதியில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர். இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் இனப்பிரச்சினைத்தீர்வு புதிய அரசியலமைப்பு துரித பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

# மூதூர் வன்முறைச் சம்பவங்கள் குறித்து மனித உரிமை ஆணைக்குழு ஆராய்வு

மூதூரில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக மனிதவுரிமைகள் ஆணைக்குழு ஆராயவுள்ளது.

இங்கு நிகழ்ந்த சம்பவங்கள் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆணைக்குழு தனது திருகோணமலை மாவட்ட இணைப்பாளரைக் கேட்டுள்ளது.

இவ் அறிக்கை கிடைத்த பின்னர் அமைதியின்மை ஏற்பட்டவிதம், அதில் பலியானோர் பற்றிய விபரங்கள் ஆகியவற்றை மனிதவுரிமைகள் ஆணைக்குழு ஆராயவுள்ளது. அறிக்கை கிடைத்த பின்னர் எதிர்காலத்தில் இது போன்ற சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுப்பதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசாங்கத்திற்கு இந்த ஆணைக்குழு ஆலோசனை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டில் வெற்றி பெறுவது மாரடைப்பு நோயைக் குறைக்கும்.

உலகக் கிண்ணக் கால்பந்து போட்டியில் வெற்றி பெறுவதால் ஒரு நாட்டின் உத்வேகம் உயர்வதோடு மட்டுமன்றி மாரடைப்பு மரணத்தின் எண்ணிக்கையையும் இது குறைப்பதாக லண்டனில் உள்ள மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

1998ஆம் ஆண்டு பிரான்ஸில் உலகக்கிண்ணக் கால்பந்துப் போட்டி நடைபெற்ற போது அதற்கான இறுதிப்போட்டியில் பிரேஸில் அணியைத் தோற்கடித்து பிரான்ஸ் வென்றது.

இந்தப் போட்டியைப் பிரான்ஸ் நாட்டுத் தொலைக்காட்சியில் இரண்டு கோடி 60 இலட்சம் மக்கள் அன்றைய தினம் கண்டு களித்தனர். இறுதிப்போட்டி நாளில் மட்டும் மாரடைப்பு மரண எண்ணிக்கை கணிசமாகக் குறைந்ததாம். ஆண்கள், பெண்கள் என இருபாலாரும் மாரடைப்பில் இருந்து தப்பினார்களாம். இந்தப் போட்டி நடை பெறுவதற்கு முன்பும் பின்பும் ஒரு நாளில் 35 பேர் மாரடைப்பால் பலியானதாகவும், ஆனால் போட்டி நடந்த அன்று 23 பேர் தான் பலியானதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

# ஆசிய விளையாட்டுப் போட்டியில் முதல் முறையான செஸ்

டோஹாவில் 2006 இல் நடைபெறும் ஆசிய விளையாட்டுப் போட்டியில் முதன் முறையாக செஸ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அகில இந்திய செஸ் கூட்டமைப்பின் பொதுச் செயலரும் உலக செஸ் சம்மேளனத்தின் துணைத் தலைவருமான உமர் கோயா இதனை உறுதிப்படுத்தினார்.

2006ஆம் ஆண்டு டோஹாவில் தொடங்கும் ஆசிய விளையாட்டுப் போட்டி சுமார் இரண்டு வாரங்கள் நடைபெறவுள்ளது.

இவ் விளையாட்டுப் போட்டியில் செஸ் உட்பட பத்துவகையான போட்டிகள் முதல் தடவையாக இடம்பெறவுள்ளன.

அத்துடன் கிரிக்கெட் போட்டிகளையும் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

# கார் பந்தயத்தில் டெண்டுல்கர்

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கர் சிறு கார்ப் பந்தயம் ஒன்றில் கலந்துகொள்ளவுள்ளார்.

எதிர்வரும் ஜூலை மாதம் சென்னையில் நடக்கும் எம்.ஆர்.எப்.எம், ஏ.ஐ.போர்முலா மொன்டியால் காரோட்டப் பந்தயத்தில் டெண்டுல்கர் பங்குபற்றவுள்ளார்.

முன்னர் விளம்பரத்துக்காகக் காரைச் செலுத்திய டெண்டுல்கர் தற்போது நிஜமாகவே கார்ப்பந்தயத்தில் ஈடுபடவுள்ளார்.

# வவுனியா, வன்னிப்பகுதியில் அன்னை பூபதி நினைவு நிகழ்வுகள்

தியாகி அன்னை பூபதி அவர்களின் 15 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று முன்தினம் தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் பேரெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டன.

வவுனியாவில் நகர சபை மண்டபத்தில் பகல் அடையாள உண்ணாவிரதமும் இரவு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் காலை 9.30 மணி தொடக்கம் 2.00 மணி வரை உண்ணாவிரத நிகழ்வுகள் இடம்பெற்றன., நடன, நாட்டிய நிகழ்வுகளும் இடம்பெற்றன.

பூநகரி வாடியடி கோட்டை மைதானத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளுக்கு பூநகரி ப.நோ.கூ. சங்கத் தலைவர் பொன். தில்லைநாதன் தலைமை தாங்கினார்.

மல்லாவிப் பிரதேசத்தில் யோகபுரம் ம.வி அதிபர் திருமதி க.கிருஸ்ணபிள்ளை தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

கிளி. வேரவில் வலயத்தில் கடற்புலிகளினால் இந்நிகழ்வுகள் மிகவும் எழுச்சிபூர்வமாக நடத்தப்பட்டன. மதனி குடியிருப்புச் சந்தியில் இருந்து கடற்புலிகளின் மாணவர் அமைப்பு பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் திருவுருவப்படம் வேரவில் இந்து மகாவித்தியாலயம் வரை எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நிகழ்வுகள் இடம்பெற்றன.

பாலிநகரில் காலை நிகழ்வுகள் பாலிநகர் ம.வி.யில் இடம்பெற்றன. மாலையில் பாலிநகர் ம.வி முன்பாக இருந்து அன்னை பூபதியின் உருவப்படம் தாங்கிய வண்ணம் ஊர்வலமாகச் சென்று பாலிநகர் பொதுமைதானத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

தியாகி அன்னை பூபதியின் 15 ஆம் ஆண்டு நிறைவு நாளையொட்டி மல்லாவி வண்ணன் வி. கழக மைதானத்தில் புலிகளின் குரல் படைத்த முத்தமிழ் கலையரங்கு நிகழ்வு நேற்று முன்தினம் சிறப்புற இடம்பெற்றது. புலிகளின் குரல் மல்லாவிப் பிரதேச தலைவர் க.தயனேசன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

(12,07, சோ)

## அன்னை பூபதி நினைவாக நூலகம் திறந்து வைப்பு

மல்லாவி நகர்ப்பகுதியில் அன்னை பூபதி நினைவாக பொது நூலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் பிரதேச சபையின் அனுசரணையுடன் நேற்று முன்தினம் காலை மாந்தை கிழக்குப் பிரதேச சபையின் விசேட ஆணையாளர் சிறீஸ்கந்தராஜா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. (07)

**- ஏ-9 வீதியில் சம்பவம் -**

## துவிச்சக்கரவண்டியில் பயணித்த யுவதியை காட்டுப்பன்றி மோதியது

(அலுவலக செய்தியாளர்)

துவிச்சக்கரவண்டியில் பயணித்த இளம்யுவதி ஒருவரை காட்டுப் பன்றி மோதியதில் அவர் படுகாயமுற்ற நிலையில் கிளிநொச்சி முதலாம் கட்டவைத்தியசாலையில் அனுமதிக்கப்பெற்று மேலதிக சிகிச்சை பெறும் பொருட்டு நேற்றைய தினம் அக்கராயன் கிளி. மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9.30 மணிக்கு முறிகண்டிக்கும் இரணைமடுச் சந்திக்குமிடையில் ஏ-9 வீதியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி பாரதிபுரத்தைச் சேர்ந்த பா.பாலசரஸ்வதி(வயது 21) என்ற யுவதியே மேற்படி சம்பவத்தில் படுகாயமடைந்து தற்போது சிகிச்சை பெற்று வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (சோ)

## கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பயிற்சி பூர்த்திசெய்தோருக்கு நேர்முகப் பரீட்சை

(வவுனியா செய்தியாளர்)

கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இலங்கையிலுள்ள 17 தேசிய கல்வியியற் கல்லூரிகளிலும் மூன்று ஆண்டு காலமாக கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பயிற்சி நெறியைப் பின்பற்றி 2002 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு எதிர்வரும் 21,22,23,24 ஆம் திகதிகளில் ஆசிரிய நியமனம் வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளது.

இவர்களுக்கு இலங்கை ஆசிரிய சேவையின் 3 - 1 வகுப்பிலுள் நியமனம் வழங்கப்பட்டு, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள மிகக் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்படவுள்ளதாக கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (10)

## 'நாற்று' சஞ்சிகை வெளிவந்தது.

தமிழீழ பெண்கள் ஆய்வு நிறுவனத்தின் நாற்று சஞ்சிகை இதழ்-21 வெளிவந்துள்ளது.

என்று விடியும்? போருக்குள் வாழ்தல், மாறுபடும் நியாயங்கள், விளக்குகள் குடத்தினுள்ளா? நூல் அரங்கு, நேற்றோடு போகட்டும், சமூக வேலிகள், யார் போட்ட முடிச்சு, பாக்கியம்மாமியும் பரமேஸ்வரியும் பவித்திராவும்,நானும் பறக்கவேணும் உயரஉயர, பெண்ணின் அடையாளம், உனதும் எனதும் வாழும் காலம், விலங்குகள் வெளியே அல்ல, பெண்களும் தமிழீழச் சட்டமும், கிரண் பேடி வாழ்க்கைத்தொடர் போன்ற ஆக்கங்கள் இதில் வெளிவந்துள்ளன.

## மூதூர் விஜயம்

திருகோணமலை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று மாலை மூதூர் பயணமாகினர்.

விடுதலைப் புலிகளுடனும் மூதூர் முஸ்லிம் பிரமுகர்களுடனும் பேசி சமாதானத்தை உருவாக்குவதற்கான சாத்தியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையிலேயே இவர்கள் கடற்படைப் படகு மூலம் மூதூர் சென்றுள்ளனர்.

# மூதூரில் தமிழ் மக்கள் வாழ்வது கேள்விக்குரிய தொன்றாகிவிட்டது

**மூதூர் துணைப் பங்குத்தந்தை நிதிதாஸ்**

(திருமலை)

மூதூரில் ஆறாவது தடவையாக முஸ்லிம் காடையர்கள் தமிழ் மக்களைத் தாக்கிக்கொன்று சொத்துக்களைச் சூறையாடி அழித்திருப்பதானது மக்கள் தொடர்ந்தும் அங்குவாழ்வதைக் கேள்விக்குறியாக்கியுள்ளதாக மூதூர் துணைப் பங்குத் தந்தை அருட்திரு நிதிதாஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

1985க்குப் பின் மூதூரில் முஸ்லிம் காடையர்களால் தமிழ் மக்கள் தாக்கப்பட்டமை இது ஆறாவது தடவையாகும்.

ஒவ்வொரு தடவையும் தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். அவர்களின் வீடுகள் அழிக்கப்பட்டும் சூறையாடப்பட்டும் உள்ளன.

மூதூரில் தமிழ் மக்களின் வாழ்க்கை இன்றைய அமைதிக் காலத்தில் கூட உத்தரவாதம் அற்றிருக்கின்றது. இன்று மூதூரில் முஸ்லிம்களின் தாக்குதல்களால் முந்நூறு வரையான தமிழ்க் குடும்பங்கள் இடம்பெயர்ந்து கிறிஸ்தவ தேவாலயங்களில் தஞ்சமடைந்துள்ளன.

மூதூரில் 15 வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. கடைகள் சூறையாடப்பட்டுள்ளன. பெரும்பாலான வீடுகள் சாம்பல் மேடாகவுள்ளன. பெரும்பாலான வீடுகளில் சொத்துக்கள் சூறையாடப்பட்டுள்ளன. எவரும் அடக்கமுடியாத சண்டித்தனமாக முஸ்லிம் காடையர்களின் அட்டகாசம் தொடர்கின்றது.

மூதூரில் கிறிஸ்துவின் பாடுகள் ஆண்டாண்டு சிறப்பாக பல ஆயிரக் கணக்கான மக்கள் திரள நடைபெறும். ஆனால் புனித வியாழனன்று ஆரம்பமான வன்முறையால் எதுவித சிறப்பும் இல்லாமல் கிறிஸ்துவின் பாடுகள் நேற்று இடம்பெற்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புலிகளுடன் பேச்சு நடத்த முஸ்லிம் பிரமுகர்கள் மறுப்பு!

**திருமலை மாவட்ட அரசியல்துறை அறிக்கை**

(திருமலை)

மூதூர் நிலைமைகள் சீரடைந்து வரும் நிலையில் முஸ்லிம் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த மறுத்துள்ளனர் என திருமலை மாவட்ட அரசியல்துறை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் முஸ்லிம் பிரமுகர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தபோதும் அவர்கள் இதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்குவதற்கான சாத்தியமான நடவடிக்கைகள் மேற்கொண்டுவரும் வேளை முஸ்லிம் பிரமுகர்கள் இவ்வாறு தெரிவித்திருப்பது வேதனைக்குரியது என மேலும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தியாகி திலீபன் மருத்துவமனை புளியங்குளத்தில் திறந்துவைப்பு!

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா புளியங்குளம் பகுதியில் தியாக தீபம் திலீபன் மருத்துவமனையின் பத்தாவது கிளை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வவுனியா வடக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் திலீப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச் சுடரினை புளியங்குளம் ஆயட்பகுதி துணைப் பொறுப்பாளர் செழியன், கள மருத்துவப் பொறுப்பாளர் வர்ணன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழ தேசியக் கொடியினை வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் ஏற்றி வைத்தார்.

தியாகி திலீபன் அவர்களின் திருவுருவப்படத்திற்கான சுடரினை நடமாடும் மருத்துவ சேவைப் பொறுப்பாளர் தேவா ஏற்றிவைத்தார். மருத்துவமனைக்கான பெயர்ப்பலகையினை மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி திரைநீக்கம் செய்து வைத்தார். மருத்துவமனைக் கட்டடத்தினை திலீபன் மருத்துவ சேவைப் பொறுப்பாளர் ஈழச்செல்வன் திறந்து வைத்தார்.

இம்மருத்துவமனையில் பலர் சிகிச்சை பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## இரவில் வெளிச்சமின்றி வாகனம் செலுத்தும் சாரதிகள் மீது காவல்துறை நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகள் மீதும் இரவு வேளைகளில் வெளிச்சம் இன்றி வாகனம் செலுத்துபவர்கள் மீதும் ஒற்றை வெளிச்சத்துடன் வாகனம் செலுத்தும் சாரதிகள் மீதும் கிளிநொச்சி காவல்துறையின் கிளி.நகர வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மைய நாட்களாக கிளிநொச்சி நகரப் பகுதியில் காவல்துறையின் வீதிப்போக்கு வரத்துப் பிரிவினர் மேற்படி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதைக் காணமுடிகிறது. அத்தோடன் வாகனங்களின் மிதிபலகையில் பயணிப்பதும் தடைசெய்யப்பட்டுள்ளதாக காவல்துறையினர் அறிவித்துள்ளனர்.

மேற்படி நடவடிக்கைகளை வீதிப்போக்குவரத்தை இலகுபடுத்தும் நோக்கிலும் பயணிகளின் நன்மை கருதியும் வீதிவிபத்துக்களை தவிர்ப்பதற்காகவுமே மேற்கொள்வதாகவும் காவல்துறையின் வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (லோ)

## கிளியில் 11 நிலையங்களில் க.பொ.த (உ/த )பரீட்சை

(அலுவலக செய்தியாளர்)

கிளி.மாவட்டத்தில் க.பொ.த. (உயர்தரம்) பரீட்சை பதினொரு நிலையங்களில் நடைபெறவுள்ளதென கிளி.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் தெரிவித்துள்ளார்.

பரீட்சார்த்திகள் தங்கள் அனுமதி அட்டையுடன் தமது தேசிய அடையாள அட்டை அல்லது தபால் திணைக்கள அட்டை, பாஸ்போட் அல்லது உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படம் ஆகியவற்றில் ஒன்றினை பரீட்சை மண்டபத்திற்கு எடுத்துச் செல்லுதல் வேண்டுமெனவும், இப்பரீட்சை தொடர்பாக ஏதும் பரீட்சார்த்திகளுக்கு பிரச்சினைகள் ஏற்படுமிடத்து உடனடியாக தன்னுடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் வேண்டியுள்ளதுடன் அடையாள அட்டைகளில் மாற்றம் செய்பவர்கள், தமது அடையாளத்தினை உரிய முறையில் நிரூபிக்கத்தவறுபவர்கள் விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு தமிழீழ காவல் துறையினரிடம் கையளிக்கப்படுவர் எனவும் தெரிவித்துள்ளார். (சோ)

## இரா.சம்பந்தன் — புலிகள் திருமலையில் சந்திப்பு!

மூதூர் பிரச்சினை தொடர்பாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தமிழர் விடுதலைக்கூட்டணி பிரமுகர் துரை ரட்ணசிங்கம் ஆகியோரை நேற்று மாலை 5.30 மணிக்கு திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக், திருமலை மாவட்டத்தளபதி பதுமன் சம்பூரில் சந்தித்து மூதூர் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடியுள்ளனர்.

## முஸ்லிம் - சிங்களவரிடையே ஒற்றுமை காக்கப்பட வேண்டும்

**அமைச்சர் ஹக்கீம்**

சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களுக்கிடையில் ஒற்றுமை காக்கப்பட வேண்டும் என அமைச்சர் ரவூப் ஹக்கீம் கோரிக்கை விடுத்துள்ளார். மூதூர் சம்பவத்தைக் காரணங்காட்டி இலங்கையின் பல பகுதிகளிலும் இனக்கலவரத்தைத் தூண்டிவிட சிலர் முயல்கின்றனர். ஆத்திர மூட்டுகின்ற செயல்களில் யாரும் ஈடுபட வேண்டாம்.

மூதூர் மற்றும் தோப்பூர் பிரதேசங்களில் ஏற்பட்டிருக்கும் இழப்புக்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றது.

மூதூரில் முழுமையான இயல்புநிலை தோன்றுகின்றவரையில் திருகோணமலையில் தங்கியிருப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

**கைக்குண்டு...**

பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளார்.

முச்சக்கர வண்டி ஒன்றில் வந்த இனந்தெரியாத சிலர் பேக்கரி மீது கைக்குண்டை வீசியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**மூதூர்...**

யில் வன்முறை இடம் பெறுவதாக எழுந்த வதந்தியையடுத்து திருகோணமலையின் புறநகர்ப்பகுதியில் நேற்று மாலை முதல் இன்று காலைவரை சிறிலங்காப் பொலிசாரினால் ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பாலையூற்று, அலஸ்தோட்டம், ஜெயவர்த்தனபுரம் பகுதிகளிலேயே ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

**புலிகள் போரை...**

ஆராய்ந்து வருவது சிறிலங்கா அரசுக்கு நம்பிக்கை ஏற்படுத்தியிருக்கின்றது இத்தகைய முயற்சிகளை அரசு ஆதரிக்கின்றது.

போரினால் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது. இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு மக்களின் அங்கீகாரத்துடனேயே எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

**சிறீலங்கா...**

அமுல்படுத்துவது குறித்த பொதுவான கொள்கை இருதரப்பு உயர்மட்டங்களால் மட்டுமே தீர்மானிக்கப்படல் வேண்டும். அத்தோடு கடல்சார் விவகாரங்களுக்கான குழுக்கள் உடனுக்குடன் விடயங்களை முன் வைக்க வேண்டும்.

கடலில் வன்முறைச் சம்பவங்களை தடுப்பதற்கான வழியாக இரண்டு கடல் சார் குழுக்கள் நிறுவப்பட வேண்டும். அவற்றில் ஒன்று திருகோணமலையிலும் மற்றையது யாழ்ப்பாணத்திலும் இயங்க வேண்டும். இக்கடல்சார் குழுக்களானது இருதரப்பு, கடற்படைகளையும் சேர்ந்த பிரதிநிதிகளைக் கொண்டதாக விளங்க வேண்டும். அதேவேளை கடல்சார் குழுக்கள் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கடற்கண்காணிப்புக்குழுவினரால் நெறிப்படுத்தப்பட வேண்டும். அத்தோடு இக்கடல்சார் குழுக்கள் முன்மாதிரியாகச் செயற்பட வேண்டும்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர், கடற்பிரதேசத்தில் யுத்த நிறுத்தத்தைப் பேணுவது தொடர்பாக சமர்ப்பித்த சிபார்சுகள் தொடர்பான முழு அறிவிலாளவிபரம் வெளிவரும்.

... பணிமனையில் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.